புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

========================================================================

*க.நா.சுப்ரமண்யத்தின் நாவல் பணி*

*முனைவர் த. இலட்சுமன்*
*கௌரவ விரிவுரையாளர்*
*முதுகலைத் தமிழ்த்துறை*
*அரசு கலைக்கல்லூரி, தருமபுரி 05*

========================================================================

*தமிழ் இலக்கிய வரலாற்றினில் ஒரு முழுமையான தொகுப்பினை உருவாக்குவதென்பது எளிதில் செய்ய முடியாத பணியாகவே இருக்கின்றது. சங்க இலக்கியம், காப்பியம் போன்ற தொல் இலக்கியங்களில் நமக்கு கிடைத்திருப்பது முழுமையானதல்ல என்பது நாம் அனைவரும் அறிந்தது. இந்நிலையின் நீட்சியே நவீன தமிழ் இலக்கியங்களிலும் தொடர்கிறது. புதுமைப்பித்தனின் சிறுகதைகளை முழுத்தொகுப்பாக அடையாளம் காண்பதற்கு ஏற்பட்ட அனுபவங்களை பேராசிரியர் தேவசகாயகுமார் கூறும்போது, “ஆய்வில் முன் செல்ல இடையூறாக இருந்தது முதன்மை ஆதாரமான புதுமைப்பித்தன் கதைகளின் ஒழுங்கின்மை”[1] என்கிறார்.*

*நவீன இலக்கியத்தின் சிறந்த சிறுகதைகளாக கருதப்படும் புதுமைப்பித்தனின் சிறுகதைகளும் இதே சிக்கலுக்கு உள்ளாகின என்பதை இதன் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. நவீன இலக்கியத்தில் சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, மொழிபெயர்ப்புகள், விமர்சனம் என பல தளங்களில் செயல்பட்டு முக்கியமான இலக்கிய ஆளுமையாகத் திகழ்ந்த க.நா.சு வின் படைப்புகளும் இதே சிக்கலுக்கு உள்ளாகியிருக்கின்றன. கந்தாடை நாராயணசாமி சுப்ரமண்யம் எழுதிய நூல்கள் எல்லாவற்றையும் இன்றைய வாசகன் ஒருவனால் படித்துவிட முடியுமா என்று சொல்ல முடியவில்லை. இவற்றை ஒரு சேர பார்ப்பது கூடச் சாத்தியமல்ல எனத் தோன்றுகிறது. சாகித்திய அகாதெமிக்காக 2000இல் இம்முயற்சியில் இறங்கிய தஞ்சை பிரகாஷ் வெற்றி பெற இயலவில்லை. இலக்கியச் சிந்தனையின் தூண்டுதலில் இம்முயற்சியில் சென்ற ஆண்டு ஈடுபட்ட கி.அ. சச்சிதானந்தம் அவற்றைத் தேடிக் கண்டுபிடிப்பது என்பது சுலபமான காரியம் அல்ல” என்று சொல்லிவிட்டார்.*

*76 ஆண்டுக்காலம் வாழ்ந்து 60 ஆண்டுக்காலம் சளைக்காமல் எழுதிய க.நா.சு வின் நூல்களை எல்லாம் தொகுத்தால் 20,000 பக்கங்களில் வரலாம். என்பது அவரது யூகம்.[2] என்ற பழ அதியமானின் கூற்று க.நா.சு வின் படைப்பு முழுமையாக தொகுக்கப்படவில்லை என்ற கருத்தினை கூறுகிறது. இதன்மூலம் க.நா.சு வின் படைப்பு முழுமையாகத் தொகுக்கப்படவில்லை என்ற கருத்தினை கூறுகிறது. இதன்மூலம் க.நா.சுவின் நாவல் தொகுப்பும் முழுமையானதாக இல்லை என்பது தெரிகிறது. நாவல்களின் எண்ணிக்கை என்ற அளவில் சமூகசித்திரம் முதற்கொண்டு தந்தையும் மகளும் உள்ளிட்ட பதினேழு நாவல்களின்[3] பெயர்களைக் குறிப்பிடுகிறார் தஞ்சை பிரகாஷ்.*

*க.நா.சு வின் நாவல்களில் அச்சில் வராமல் உள்ள நாவல்கள் எனத் திருவாலங்காடு (4 பாகம் 1000 பக்கத்துக்கு மேல்) மால்தேடி, வக்கீல் ஐயா, ஜாதிமுத்து, சாலிவாஹனன், சாத்தனூர் போன்ற 15க்கும் மேற்பட்டவை கையெழுத்துப் பிரதிகளாக உள்ளனவாம். ஆக 35 நாவல்கள் தேறுகின்றன என்பது பழ. அதியமானின் கருத்து. நாவல்களின் எண்ணிக்கையைப் பொருத்தமட்டில் க.நா.சுவிற்கே இதில் ஐயபாடு இருந்திருக்கின்றது.*

*"ஒரு நாள் என்ற நாவல் நான் எழுதிய நாவல்களில் ஒன்பதாவது என்று எண்ணுகிறேன்"[4] என்பதின் மூலம் க.நா.சுவின் நாவல் எண்ணிக்கை குறித்த ஐயப்பாடு தெரிகிறது.*

*க.நா.சு வின் நாவல்கள் இதழிலும், புத்தகங்களிலும் மட்டும் வெளிவராமல் வானொலியின் வழியிலும் வெளிவந்துள்ளன. சமூகச் சித்திரம், நல்லவர், ஆட்கொல்லி போன்ற நாவல்கள் இத்தன்மையிலானவை. சிறுகதைகள், கவிதைகள் மட்டுமே தொகுப்புகளாக வெளிவந்துகொண்டிருந்த நிலையில் நாவல்களையும் க.நா.சு தொகுப்பாக வெளியிட்டிருக்கிறார். 3 நாவல்கள் (1985), (ஏழுபேர், பசி, அசுரகணம்), நான்கு நாவல்கள், (1985), (நளினி, வாழ்ந்தவர் கெட்டால், ஆட்கொல்லி, பெரிய மனிதன்) போன்றவை தொகுப்புகளாக வெளிவந்த படைப்புகளாகும். நாவல்கள் அஞ்சல் வழியில் வெளியிடுவது என்ற புதிய முறையில் க.நா.சு செய்திருக்கிறார். இலக்கிய வட்டத்தின் ஒவ்வொரு இதழுடனும் நடுத்தெரு நாவலின் பகுதிகள் தரப்பட்டு பின்னர் அவை நூலாக இறுதி வடிவம் பெற்றிருக்கின்றன.*

*க.நா.சு வின் முதல் நாவல் சர்மாவின் உயில் இது 21 நாட்களில் எழுதி முடிக்கப்பட்டுள்ளது. கடைசி நாவல் பித்தப்பூ, சர்மாவின் உயில் முதலில் எழுதப்பட்டிருப்பினும் 1948இல் வெளிவந்தது. பசி நாவல் 1943 இல் வெளிவந்தது. எனவே, நாவல் வெளிவந்ததின் அடிப்படையில் பார்க்கும்போது பசியே முதல் நாவலாகும். க.நா.சு வின் நாவல் எண்ணிக்கையில் குழப்பம் நீடிக்கிறது என்றாலும். காவ்யா வெளியிட்டுள்ள க.நா.சுவின் நாவல் தொகுப்பிலுள்ள 16 நாவல்களும் இக்கட்டுரையின் ஆய்வு மூலங்களாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இப்பதினாறு நாவல்களிலும் உள்ள க.நா.சு படைப்பாளுமையையும் பணியையும் ஆராய்ந்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*க.நா.சு நாவல்களின் கதைக்கரு*

*சோமு என்ற ஏழைச்சிறுவனின் மளிகை எமர்சென்ட் சோமு முதலியாராக மாறுவதையும், பணம் சம்பாதிப்பது மட்டுமே வாழ்க்கை என்ற சோமு முதலியார் இறுதியில் ஆன்மீகத் தேடலோடு இறப்பதையும் கூறும் நாவல் பொய்த்தேவு.[5] பெரிய மனிதன் என்ற சமூகத்தில் மதிக்கப்படும் ஒருவன் தன்னைப் பற்றிய சுய விமர்சனத்தின் மூலம் தனது பெரிய மனிதன் என்ற முகமூடியில் ஒளிந்திருக்கும் குற்றங்களை போலித்தனங்களை அதனால் அவன் எதிர்கொள்ளும் உளவியல் பிரச்சினைகளை கூறும் நாவல் பெரிய மனிதன்.[6]*

*பணமே பிரதானம் என்ற வண்ணத்தில் உறவுகளை நண்பர்களை ஏமாற்றிய வேங்கடாசலம் ஜானகி தம்பதியினரின் வாழ்வையும் இவர்களின் பிள்ளைத் திருமணத்திற்கு நண்பர்கள் உறவினர்கள் என யாரும் இல்லாத வெறுமையையும் கூறும் நாவல் ஆட்கொல்லி[7] நீதியுரைக்கும் தன்மை இந்நாவலில் வெளிப்படுகிறது. சித்தியின் கொடுமையினால் துன்பப்படும் நளினி என்ற சிறுமியின் சிறுவயது வாழ்வு முதற்கொண்டு கணவன் ஒரு திருடன் எனத் தெரிந்த அடுத்த நாளே கணவனைப் பிரிந்து செல்லும்கதையைக் கூறும் நாவல் நளினி[8].*

*விபத்தொன்றினால் மனநிலை பாதிப்படைந்த தியாகு என்ற இளைஞனின் வாழ்வையும், அதன் வழியே சுயம் மறைக்கப்பட்டு வாழும் மனிதர்களின் உளவியல் பிரச்சனைகளையும் கூறும் நாவல் பித்தப்பூ[9]. தந்தையற்ற சரோஜா என்ற பெண் தனது கல்லூரி ஆசிரியர் நாராயணன் எனபவனை திருமணம் செய்து கொள்ள நினைக்கும்போது ஏற்படும் குழப்பங்களை காதல் நிகழ்ச்சிகளை கூறும் நாவல் சமூக சித்திரம்[10].*

*குழந்தையில்லாத பெண்ணின், பிரச்சனைக்குத் தீர்வாக விதவைத் திருமணத்தை முன்னிருத்தும் கதைக்கருவை கொண்ட நாவல் சர்மாவின் உயில்[11]. திருவள்ளுவரை சமணர் என்றும், கிறித்துவ சமய பரப்பாளரான் புனித தாமஸும் திருவள்ளுவரும் சந்தித்துக் கொண்டனர் என்றும் வரலாற்று அடிப்படையிலான புனைவை கூறும் நாவல் தாமஸ் வந்தார்[12].*

நேதாஜியின் இராணுவத்தில் பணிபுரிந்த மேஜர் மூர்த்தி சாத்தனூர் கிராமத்திற்கு வருவதையும், வாழ்வின் எதார்த்தத்தைப் புரிந்து கொள்வதையும் விவரிக்கும் நாவல் ஒரு நாள்[13]. பணக்காரர்கள் ஏழையாக மாறுவதையும், அந்த ஏழ்மையிலும் தங்களின் ஆடம்பரத்தை குறைத்துக்கொள்ள முடியாது துன்பப்படும் நிலையையும் கூறும் நாவல் வாழ்ந்தவர் கெட்டால்[14].

எழுத்தாளன் ஒருவனிடம் கொலையாளியும், காவல் துறை பணியாளரும் கொலையைப் பற்றி விவரிப்பது "அவரவர் பாடு"[15] என்ற நாவல். மர்ம நாவல் போன்றது. ஒரு வீதியில் புதிதாகக் குடியேறிய விலைமாது குடும்பத்தைப் பற்றியும் சீர்திருத்த எண்ணம் கொண்ட ஓர் இளைஞன் அக்குடும்பத்தில் விலைமாது பெண் ஒருத்தியை மணக்க நினைப்பதைப் பற்றியும் கூறும் நாவல் ஏழுபேர்[16].

சாமா என்ற பிராமண பட்டதாரி இளைஞன் தன்னுடன் பயின்ற ராஜி என்ற விதவை பெண்ணை மறுமணம் செய்துகொள்ள நினைப்பதையும், அதனால் ஏற்படும் சிக்கல்களையும் கூறும் நாவல் பசி[17]. ராமன் என்ற கல்லூரி இளைஞனின் காதலை அவனுக்கு ஏற்படும் உளவியல் பிரச்சனைகளையும் கூறும் நாவல் அசுரகணம்[18].

சாத்தனூர் கிராமத்தில் அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்தும் அவதூதர் ஒருவனின் அற்புதங்களையும் அதன் வழியே சாத்தனூர் மக்களின் குணாதிசயங்களையும் கூறும் நாவல் அவதூதர்[19]. வெளிநாட்டிலிருந்து சொந்த கிராமத்திற்கு வரும் ராமானுஜன் என்ற விஞ்ஞானியின் வாழ்வையும், கிராமத்தில் கோதை என்ற பெண்ணுடன் இணைந்து அவள் மேற்கொள்ளும் கல்வி சீர்திருத்தத்தையும் விவரிக்கும் நாவல் கோதை சிரித்தாள்[20].

நாவல் களம்

தாமஸ் வந்தார் நாவல் மட்டுமே மைலாப்பூரை களமாகக் கொண்டுள்ளது. மற்ற நாவல்கள் சாத்தனூர், தஞ்சை, கும்பகோணம், மாயவரம் ஆகிய காவிரிக்கரையை ஒட்டியப் பகுதிகளைக் களமாகக் கொண்டிருக்கின்றன.

பாத்திர படைப்பு

மனிதர்களிடம் பழகத் தொடங்கிய பிறகு முழுவதும் நல்ல கதைமாந்தைப் படைக்க நான் முயலுவதில்லை என்று ரிச்சர்டு கம்பர்லாந்தும் முழுவதும் நல்ல அல்லது தீய கதை மாந்தர் என்னை வெறுப்படையச் செய்கின்றனர் என்று ஜேன் ஆஸ்டினும் கூறுகின்றனர். பாத்திரப்படைப்பு பற்றி இவ்வரையறை க.நா.சுவின் நாவல்களில் வரும் பாத்திரங்களுக்குப் பெரிதும் பொருந்துகிறது. நன்மை, தீமை பற்றிய பிரக்ஞை இன்றி வாழ்வை எப்படியாயினும் எதிர்கொள்ள வேண்டும் என்ற நோக்கிலேயே க.நா.சு வின் பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன.

அவதூதர், தாமஸ் வந்தார், கோதை சிரித்தாள் ஆகிய நாவல்களில் இலட்சிய கதாபாத்திரம் என்ற நோக்கினில் மிகவும் நற்குணமுள்ள கதாப்பாத்திரங்களை க.நா.சு படைத்திருக்கிறார். பெரும்பாலும் க.நா.சு வின் பாத்திரங்கள் என்ற ஒன்றிலும் நிம்மதியற்று எவற்றையோ தேடும் தேடலோடு படைக்கப்பட்டிருக்கின்றனர். கிராம வாழ்வும், ஆன்மீகமும் இவர்களிக் தேடலுக்கு முற்றுப் புள்ளி வைக்கிறது.

எதிர்நிலை என்ற கதாபாத்திரத்திற்குப் பதிலாக வாழ்வில் குழப்பமுற்று அலையும் மனிதர்களை குழப்பமற்ற நிலைக்கு ஆற்றுப்படுத்துவதாய் பாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. மீனாட்சியம்மாள் (சமூக சித்திரம்), கிருஷ்ணசாமி ஐயர் (சர்மாவின் உயில்) மேஜர் மூர்த்தியின் மாமி (ஒரு நாள்), ராஜா (ஏழுபேர், சர்மாவின் பாட்டி (பசி), கோதை (கோதை சிரித்தாள்) போன்றோர் ஆற்றுப்படுத்தும் பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

க.நா.சு வின் நாவல்களின் கருத்தியல் வெளிப்பாடு

க.நா.சு வின் நாவல்களில் சில பொதுவான கூறுகள் இடம்பெற்றிருக்கின்றன.அவை, வெளிநாடு, அல்லது நகரத்திலிருந்து ஒருவர் தனது கிராமத்தை நோக்கி வருதல் நகரம் (அ) வெளிநாட்டில் தெளிவில்லாத குழப்பமற்ற மனம்,

*கிராமத்தில் தெளிவடைசிறது. கிராம வாழ்க்கை அவன் வாழ்வை அர்த்தமுள்ளதாய் மாற்றுகிறது. பொய்த்தேவு நாவலில் அக்கரை கிழவர். சர்மாவின் உயில் நாவலில் சிவராமன், ஒரு நாள் நாவலில் மேஜர் மூர்த்தி, கோதை சிரித்தாள் நாவலில் ராமானுஜன் ஆகிய கதாபாத்திரங்களை இந்த நகர – கிராம இடம்பெயர்வு வாழ்விற்கு உதாரணங்களாக கூறலாம். க.நா.சு நகர (அ) வெளிநாட்டு வாழ்வை நவீனத்துவம் என்ற முகம் கொண்டதாய் கருதி ஹொடெக்கரின் இருத்தலிய அடிப்படையில் தனக்கு முற்றிலும் மாறான சமூகமாகக் கருதியிருக்கிறார்.*

*க.நா.சு நாவல்களில் கிராம வாழ்வை, ஆன்மீக வாழ்வை போற்றுகிறார். நகரம் தீயது, கிராமம் நல்லது என்பது போன்ற கருத்துகள் உருவாகி வருகின்றன. சீர்திருத்தம், புரட்சி போன்ற அவரின் கருத்துகளே, அவரின் மீது ''இடது சாரி வெறுப்பாளர்'' என்ற பிம்பத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை உணர முடியும். விதவைத் திருமணம், கலப்பு மணம், கற்பிழந்த பெண்ணை மணந்து கொள்ளுதல் ஆகிய சீர்திருத்த நிகழ்வுகள் க.நா.சு வின் நாவல்களில் வெளிபடுகின்றன. இவற்றை க.நா.சு எவ்வாறு படைத்திருக்கிறார் என்பதின் மூலம் சீர்திருத்தத்தின் மீது அவருக்கிருந்த நிலைப்பாட்டினை அறிந்து கொள்ளலாம்.*

*''தாமஸ் வந்தார்'' நாவலில் பிராமணன் வாதூலனக்கும் கிறித்துவ பெண் மரியத்திற்கும் கலப்பு மணம் நிகழ்கிறது. தாமஸ் எனும் தீர்க்கதரிசி இக்கலப்பு மணம் நிகழும் என்று கூறுகிறார். இக்கலப்பு மணத்தின் காரணமாகவே கொல்லப்படுகிறார். இதன் மூலம் கலப்பு மணம் சமூகத்தில் குழப்பத்தைத் தோற்றுவிக்கும் தீர்க்க தரிசியாக இருந்தாலம், கடவுளுக்கு நிகரான சக்தி படைத்து அற்புதங்கள் செய்பவராக இருந்தாலும் கொலை செய்யப்படுபவர் என்பதான குரலே நாவலில் ஒலிக்கிறது. எனவே, கலப்பு மணம் எனும் சீர்திருத்த நடவடிக்கை ஒரு வகையில் அகாயகமரமானது. அதனை, கைவிடுவது நல்லது என்ற குரல் மறைமுகமாக ஒலிப்பதை உணரமுடிகிறது. கலப்பு மணம் அபாயகரமானது என்பதை வெளிப்படையாகக் கூறும் குரலும் க.நா.சு வின் நாவல்களில் வெளிப்படுகிறது. கற்பிழந்த பெண்ணிற்கு வாழ்வு கொடுப்பது என்ற சீர்திருத்தம் பற்றி ஏழுபேர் நாவல் பேசுகிறது.*

*இறுதியாக,*

*க.நா.சு வின் நாவல்களின் நீட்ஷே ஃப்ராய்டு ஆகிய அறிஞர்களைப் பற்றிய கருத்தும், அவ்வறிஞர்களின் கருத்தும் வெளிப்படுகிறது க.நா.சு நீட்சேவை ஏற்றுக் கொள்கிறார். ஃப்ராய்டின் கருத்தை க.நா.சு தன்னுடைய நாவல்களில் பயன்படுத்துகிறார். அதே நேரத்தில் ஃப்ராய்டின் கருத்தின் மீதான விமர்சனமும் க.நா.சு வின் நாவல்களில் வெளிப்படுகிறது. வாலிப முடுக்கிலே இளமைப் புரட்சி வேகத்திலே கலையிலே ஒரு பகுதியினர் கட்சி கட்டிக்கொண்டு இந்த விசயங்களையெல்லாம் பற்றிப் பேசுகிறார்கள். இப்படிப் பேசுவதை இந்தத் தலைமுறைக்குச் சாத்தியமாக்கியவன் என்று டாக்டர் சிக்மண்ட் ஃப்ராய்ட் என்கிற லியன்னா நகரத்து மனோதத்துவ நிபுணனைச் சொல்ல வேண்டும். உலகிலே ஆண் பெண் உறவு தவிர வேறு எதுவுமே இல்லை என்ற வரிகள் ஃப்ராய்டின் உளப்பகுப்பாய்வை விமர்சிக்கிறது.*

*மேற்கண்ட நீட்சே, ஃப்ராய்டு ஆகியோரின் கருத்துக்களை விமர்சித்தல் போன்ற கருத்துக்களின் அடிப்படையில் க.நா.சு வின் கருத்தியலை மதிப்பிடலாம். அறிவு தளம் என்று சொல்லுகிறபோது போலியாக ஓர் அறிவு தளம் அதாவது நமக்கு நம்முடைய படிப்பில் இருந்து வராத நம்முடைய மண்ணில் வேர்விடாத அறிவு இயக்கங்கள் பல பரவி இருக்கின்றது.*

*துணை நின்ற நூல்கள்:*


1. *தேவசகாயகுமார், புதுமைப்பித்தின் சிறுகதைகளில் ஏற்பட்ட அனுவங்கள்.*
2. *பழ. அதியமான், க.நா.சு : ஓர் எழுத்தியக்கம், காலச்சுவடு இதழ், காலச்சுவடு பதிப்பகம்.*

3. தஞ்சை பிரகாஷ் கட்டுரைகள், காவ்யா வெளியீடு
4. க.நா.சுப்ரமண்யம், ஒரு நாள், எழுத்துப் பிரசுரம், சென்னை.
5. க.நா.சுப்ரமண்யம், பொய்த்தேவு, எழுத்துப் பிரசுரம், சென்னை.
6. க.நா.சுப்ரமண்யம், பெரிய மனிதன், எழுத்துப் பிரசுரம். சென்னை.
7. க.நா.சுப்ரமண்யம், ஆட்கொல்லி, நற்றிணைப் பதிப்பகம், சென்னை.
8. க.நா.சுப்ரமண்யம், நளினி, க.நா.சு கதைகள் -1, காவ்யா வெளியீடு
9. க.நா.சுப்ரமண்யம், பித்தப்பூ, புதுப்புனல் வெளியீடு, சென்னை.
10. க.நா.சுப்ரமண்யம், சமூகசித்திரம், க.நா.சு கதைகள் -1, காவ்யா வெளியீடு.
11. க.நா.சுப்ரமண்யம், சர்மாவின் உயில், க.நா.சு கதைகள் -1. காவ்யா வெளியீடு
12. க.நா.சுப்ரமண்யம், தாமஸ் வந்தார், எழுத்துப் பிரசுரம், சென்னை.
13. க.நா.சுப்ரமண்யம், ஒரு நாள். க.நா.சு கதைகள் -2, காவ்யா வெளியீடு
14. க.நா.சுப்ரமண்யம், வாழ்ந்தவர் கெட்டால், நற்றிணைப் பதிப்பகம், சென்னை.5
15. க.நா.சுப்ரமண்யம், அவரவர்பாடு, நற்றிணைப் பதிப்பகம், சென்னை.
16. க.நா.சுப்ரமண்யம். ஏழுபேர். க.நா.சு கதைகள்-2, காவ்யா வெளியீடு
17. க.நா.சுப்ரமண்யம், பசி. க.நா.சு கதைகள் -2, காவ்யா வெளியீடு
18. க.நா.சுப்ரமண்யம். அசுரகணம், க.நா.சு கதைகள் -2, காவ்யா வெளியீடு
19. க.நா.சுப்ரமண்யம், அவதூதர், நற்றிணை பதிப்பகம், சென்னை.
20. க.நா.சுப்ரமண்யம். கோதைசிரித்தாள். க.நா.சு கதைகள் -2, காவ்யா வெளியீடு.

********* ********* ********** ********* ********* ********** ********** **********